# கள்ளக்குறிச்சி சம்பவம்: முதல்வர் உத்தரவு!

முதல் பக்கத் தொடர்ச்சி

எடுக்கும் பொருட்டும், இவ்வழக்கு CBCID வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து இலட்சம் ரூபாயும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இச்சம்பவம் தொடர்பாக, இன்று, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல் துறை இயக்குநர், கூடுதல் காவல்துறை இயக்குநர் (மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு), மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அலுவலர்கள், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்று நான் அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

மெத்தனால் கலந்த சாராய

**இருப்பை முழுமையாக அழிக்க நடவடிக்கை!**

- மெத்தனால் கலந்த விஷச்சாராய உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்ட அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டுமென்றும், சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள மெத்தனால் இருப்பை முழுமையாகக் கண்டறிந்து, அவற்றைக் கைப்பற்றி அழித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளேன். மேலும், விஷச்சாராய உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட மெத்தனால் எங்கிருந்து கொண்டு வரப்பட்டது என்பதற்கான மூலகாரணத்தையும் காவல் துறையினர் கண்டுபிடிக்க அறிவுறுத்தியுள்ளேன்.
- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை, பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை, சேலம் மற்றும் விழுப்புரம் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டுமென்றும், அங்கு அவர்களுக்குத் தேவையான சிறப்பு சிகிச்சை வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளேன்.

**இரண்டு தினங்களில் அதிகாரிகள் அறிக்கை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்!**

- உள்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் காவல் துறை இயக்குநர் ஆகியோர் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு உடனடியாகச் சென்று, சம்பவம் குறித்து ஆய்வு மேற்கொண்டு அறிக்கை ஒன்றினை இரண்டு தினங்களில் வழங்குவார்கள்.
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு, இது நிகழ்ந்ததற்கான அனைத்துக் காரணிகளைக் கண்டறியவும், எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் தமிழ்நாட்டில் மீண்டும் நடைபெறாமல் இருக்க, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனைகளை வழங்கிடவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் பி.கோகுல்தாஸ் தலைமையில் ஒருநபர் ஆணையம் அமைத்திட உத்தரவிட்டுள்ளேன். இந்த ஆணையம், சம்பவம் குறித்து முழுமையாக விசாரித்து தனது பரிந்துரைகளை மூன்று மாதங்களுக்குள் வழங்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

முதல் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். மனுதாரார்கள் தரப்பு வைத்த கோரிக்கைகளை கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் விளக்கம் அளிக்கும்படி ஒன்றிய அரசுக்கும், தேசிய தேர்வு முகமைக்கும் நோட்டீஸ் அனுப்பி உத்தரவிட்டனர். மேலும், வழக்கு விசாரணையை ஜூலை 8ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

**தேசிய தேர்வு முகமை நடத்திய மூன்று தேர்விலும் குளறுபடி!**

மேலும் தேசிய தேர்வு முகமை நடப்பு ஆண்டு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு, ஒன்றிய பல்கலைக் கழகங்களில் மாணவர் சேர்க்கைக்கான க்யூட் தேர்வு மற்றும் கல்லூரிகளில் துணை பேராசிரியர் தகுதிக்கான நெட் தேர்வு ஆகிய 3 முக்கிய தேர்வுகளை நடத்தியது. இதில் நீட் தேர்வில் கேள்வித்தாள் கசிவு தொடர்பாக பீகார், குஜராத், ஹரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மேலும் கருணை மதிப்பெண் வழங்கியதில் மோசடி புகார் எழுந்ததை தொடர்ந்து 1,563 மாணவர்களுக்கு வழங்கிய கருணை மதிப்பெண்கள் ரத்து செய்யப்பட்டு, அவர்களுக்கு வரும் 23ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்பட உள்ளது.

இதேபோல், 18.06.2024 அன்று 11 லட்சத்து 21 ஆயிரம் பேர் பங்கேற்ற யுஜிசிநெட் தேர்வில் பெருமளவு முறைகேடு நடந்ததாக கூறி மறுநாளே தேர்வு திடீரென ரத்து செய்யப்பட்டது. சைபர் கிரைம் போலீசாருக்கு கிடைத்த விபரங் களின் அடிப்படையில் நெட் தேர்வு ரத்துசெய்யப்பட்டதாகவும், இது குறித்து சிபிஐ விசாரணை நடத்தும் என்றும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. எனினும் மோசடி தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், கடந்த மாதம் நடைபெற்ற க்யூட் தேர்விலும் முறைகேடு புகார் எழுந்தது. க்யூட் தேர்வு கடந்த மே 15 முதல் 24 வரை 7 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால், உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் 220 மாணவர்களுக்கு கேள்வித்தாள் மாற்றி வழங்கப்பட்டதாக அந்ததேர்வு மையத்தில் தேர்வு ரத்து செய்யப்பட்டது.

இதேபோன்று இந்தூர், பீகார், கோவா, அசாம் ஆகிய மாநிலங்களிலும் நடைபெற இருந்த தேர்வுகள் பின்னர் 29ஆம் தேதிக்கு திடீரென ஒத்தி வைக்கப்பட்டன. அதேபோன்று டெல்லி நொய்டா, பரிதாபாத், காசியாபாத், குருகிராம் ஆகிய இடங்களில் நடைபெற இருந்த தேர்வு முதல் நாள் இரவு திடீரென ரத்து செய்யப்பட்டு, மே 29ஆம் தேதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஒரு லட்சத்து 52 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்ற க்யூட் தேர்வு, எதற்காக மாற்றப்பட்டது என்பது குறித்து இதுவரை தேசிய தேர்வு முகமை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. தேசிய தேர்வு முகமை நடப்பாண்டு நடத்திய மூன்று தேர்வுகளிலும் பல குளறுபடிகள் நடந்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் அரசு சலுகைகள்!

# கள்ளச் சாராயத்தை வேரோடு அழிக்க தீவிர நடவடிக்கை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!

கள்ளக்குறிச்சி, ஜூன் 22-

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் டேனியல் மிஷன் பள்ளியில், மெத்தனால் அருந்தி உயிரிழந்த நபர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த, தலா ரூ.10 இலட்சம் நிவாரண உதவித்தொகைக்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19.06.2024 அன்று நேரில் வழங்கி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராஜ், அரசு சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அரசு செயலர் தாரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், ரிஷி வந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.



பின்னர் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரம் பகுதியில் சாராயம் குடித்து, உடல் உபாதை காரணமாக சிலர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதை அறிந்த, முதலமைச்சர் அவர்கள், உடனடியாக என்னையும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களையும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

இத்தருணத்தை கையாள்வதற்கு ஏதுவாக, சிறப்பு மருத்துவர்கள் 165, உடற்கூறாய்வு மருத்துவர்கள் 56 என 221 மருத்துவர்களுடன் மருத்துவக் குழுக்கள் அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நடைபெற்று வரும் சிகிச்சைப் பணிகளை மேலும் துரிதப்படுத்தும் வகையில் முதலமைச்சர் அவர்கள், இன்றைய தினம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை இங்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

**10-க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பணி நீக்கம்!**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளித்து வரும் மருத்துவர்களிடம் அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்து, சிகிச்சைக்கான சில அறிவுரைகளை மருத்துவர்களிடம் வழங்கி, விரைந்து செயல்பட அறிவுறுத்தியுள்ளார்கள். இச்சம்பவத்திற்கு காவல்துறை கவனக்குறைவே காரணமாக கருதிய முதலமைச்சர் அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாள், உதவி காவல் ஆய்வாளர், எழுத்தர் என 10த்திற்கும் மேற்பட்ட காவல்துறையினரை தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணையிட்டார்கள். மாவட்ட ஆட்சித்தலைவரை பணியிடமாற்றம் செய்துள்ளார்கள்.

**27 பேருக்கு நிவாரண உதவி!**

இன்றைய தினம் உள்துறை செயலாளர், தலைமை காவல்துறை அலுவலர் ஆகியோருடன் கலந்தாலோசனை செய்து, 2 தினங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளவும், ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் அவர்கள் தலைமையில் விசாரணைக் குழு அமைத்து விசாரணை செய்யவும் ஆணையிட்டுள்ளார்கள். நேற்றைய தினம் பொதுமக்கள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள் இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்திற்கு ரூ.50,000 முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் அறிவித்த நிவாரண உதவித் தொகையினை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் 27 நபர்களின் குடும்பத்திற்கு வழங்கியுள்ளார்கள். மேலும், நிவாரண உதவித்தொகை அவரவர் இருப்பிடங்களில் சென்று வழங்கும் வகையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மருத்துவமனைகளில் 132 நபர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 94 நபர்கள் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர். கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 22 நபர்களும், பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் 3 நபர்களும், சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 8 நபர்களும், விழுப்புரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 4 நபர்கள் என இது வரை மொத்தம் 37 நபர்கள் உயிரிழந்துள்ளனர். மீதமுள்ளவர்களை காப்பாற்ற தொடர்ந்து மருத்துவ சிகிச்சை எடுக்கப்பட்டு வருகிறது.

**வாரந்தோறும் முதல்வர் ஆய்வு!**

மேலும், இம்மாவட்டத்திற்கு புதியதாக நியமனம் செய்யப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார். அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவார். முதலமைச்சர் அவர்கள் மாதாந்திர ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாடு உள்ளிட்ட ஆய்வுகளை தொடர்ந்து நடத்தி, மாவட்டத்தின் நிகழ்வுகளை கண்காணித்து வருகிறார்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் ஆய்வு மேற்கொள்கிறார்கள். வாராந்தோறும் உள்துறை செயலாளர் மற்றும் காவல்துறை தலைவர் தலைமையில் ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து முதலமைச்சர் அவர்கள் சி.பி.சி.ஐ.டி. விசாரணை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். மேலும், சி.பி.சி.ஐ.டி. தலைவர் தலைமையில் 5 குழுக்கள் அமைக்கப்பட்டு, இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, முழுமையாக இதனை ஒழிப்பதற்கு உத்தரவிட்டுள்ளர்கள். இந்த மெத்தனால் எங்கிருந்து வந்தது என்பதை கண்டறிந்து, வேரோடு அழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் தமிழ்நாடு முழுவதும் கள்ளச்சாரய ஒழிப்பில் தனிகவனம் செலுத்தப்படும்.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஒரு நபருக்கு 1 மருத்துவர், 2 செவிலியர் என்ற முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, மருத்துவமனையில் உயிர்காக்கும் அனைத்து மருந்துகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளபடி, எதிர்காலத்தில் இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் அரசின் அனைத்து சலுகைகளும் வழங்கப்படும் என பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்.

## ‘நீட்’ ஊழல் மையமாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் உள்ளன

# பா.ஜ.க. வின் பிடியிலிருந்து கல்வித் துறையை மீட்க வேண்டும்!

## புதுடெல்லியில் ராகுல்காந்தி எம்.பி.பேட்டி!

டெல்லி , ஜூன் 22 -

பாஜக ஆளும் மாநிலங்கள் நீட் ஊழல் மையங்களாக திகழ்கிறது. நீட் வினாத்தாள் கசிவைத் தடுப்பதில் பிரதமர் மோடி தோல்வி அடைந்துவிட்டார் என்று காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், “நீட் வினாத்தாள் கசிவுகளை தடுப்பதில் பிரதமர் மோடியின் அரசு தோல்வி அடைந்துவிட்டது. மத்தியப் பிரதேசத்தை உலுக்கிய வியாபம் ஊழலை விட மிகப்பெரிய ஊழலாக நீட் முறைகேடு உருவெடுத்துள்ளது. அரசின் அனைத்து அமைப்புகளையும் பாஜக கைப்பற்றியதே நீட் முறைகேடு போன்ற ஊழலுக்கு காரணம். நான் இரண்டாம் கட்ட ஒற்றுமை நியாய யாத்திரை சென்ற போது வினாத்தாள் கசிவு பற்றி மாணவர்கள் என்னிடம் கூறினர். நீட் ஊழல் மையமாக பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் திகழ்கின்றன என்று குறிப்பிட்டார்.



தொடர்ந்து இந்திய கல்வித்துறையில் பா.ஜ.க.வும் அதன் அமைப்புகளும் ஊடுருவி அதை குட்டிச்சுவராக்கி விட்டன. கல்வியை செல்லாததாக்கும் நடவடிக்கையை மோடி அரசு தற்போது செய்துள்ளது. சுதந்திரமான கல்வி முறை இல்லாமல் போனதற்கு காரணமே பா.ஜ.க.வும் அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்ஸும்தான்.சுதந்திரமான கல்வி முறையை மாற்றி ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் சித்தாந்தத்தை புகுத்தி விட்டது. துணைவேந்தர்கள் தகுதி அடிப்படையில் நியமிக்கப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களே துணைவேந்தர்களாக நியமிக்கப்படுகின்றனர். ஆர்.எஸ்.எஸ். பிடியில் இருந்து கல்வி நிறுவனங்களை மீட்காதவரை மாணவர்களின் துயரங்கள் நீங்கப்போவது இல்லை. ஆர்.எஸ்.எஸ்., பாஜக பிடியில் இருந்து கல்வித்துறையை மீட்காதவரை வினாத்தாள் லீக், தேர்வு ரத்து தொடரும் எனவும் தெரிவித்தார்.

யுஜிசிநெட் தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது; நீட் தேர்வுக்கு என்ன நிகழப் போகிறது என்பது தெரியவில்லை. என்ன நடவடிக்கையாக இருந்தாலும் தான் தோன்றித்தனமான முறையில் மேற்கொள்ளக் கூடாது . மோடியின் கவனம் முழுக்க முழுக்க சபாநாயகர் தேர்வில் தான் உள்ளது. மாணவர்களை பொறுத்தவரை பொறுப்பற்ற முறையில் அரசு செயல்படுவதை அனுமதிக்க மாட்டோம். உளவியல் ரீதியில் பிரதமர் மோடி உருக்குலைந்து போய்விட்டார். வாரணாசியில் பிரதமர் மோடி கார் மீதே செருப்பு வீசப்பட்டுள்ளது. எந்தவித சமரச முறைக்கும் மோடி தயாராக இல்லை.

கடினமாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள், வினாத்தாள் முன்கூட்டியே கசிவதால் பாதிக்கப்படுகின்றனர். தேர்வு முறைகேடுகளை நாடு முழுவதற்கும் பா.ஜ.க. அரசு விரிவுபடுத்தி விட்டதால் மாணவர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர். மாணவர்கள் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். முதலாவதாக இளைஞர்கள் வேலை வாய்ப்பு கிடைக்காமல் வேதனையில் உள்ளனர். அக்னிபாத் திட்டத்தின் மூலம் ராணுவத்தில் தொடர்ந்து பணிபுரிவதற்கான வாய்ப்பை பா.ஜ.க. அரசு பறித்துவிட்டது. இளைஞர்கள் வேலை பெறுவதற்கான வாய்ப்புகளை ஒவ்வொன்றாக ஒன்றிய அரசு மூடி வருகிறது,”இவ்வாறு ராகுல்காந்தி தெரிவித்தார்.



மயிலாடுதுறை மாவட்ட இளைஞர்அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்ட, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் செள. சர்வோதயன் ஏற்பாட்டில் மயிலாடுதுறை தியாகி நாராயணசாமி நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள திருநங்கைகளுக்கு டிராவல் பேக், புடவை, இனிப்பு மற்றும் உணவு ஆகியவற்றை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மயிலாடுதுறை மாவட்டத் தலைவர் எஸ். ராஜ்குமார் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் செள.சர்வோதயன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நேற்று முன்தினம் (20.6.2024) நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் நா. புகழேந்தி, சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள், குவைத் நாட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விஷச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்கள் ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

## தீ விபத்து:

# குவைத்தில் உயிரிழந்தவர்களுக்கு - தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரங்கல்!

## பேரவையில் உறுப்பினர்கள் மவுன அஞ்சலி!

சென்னை, ஜூன் 22-

குவைத் நாட்டில் தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் குறித்து சட்டப் பேரவையில் பேரவைத் தலைவர் அவர்கள் இரங்கல் குறிப்பு படித்தார்.

குவைத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பேரவைத் தலைவர் அவர்கள் படித்த குறிப்பு வருமாறு:-

**“குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் 12.6.2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சார்ந்த ஏழு பேர் உள்ளிட்ட சிலர் உயிரிழந்தது குறித்தும், படுகாயமடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.**

**உயிரிழந்தவர்களின் உடல்களை தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர முதலமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கி, உரிய துரித நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்கள்.**

**இக்கொடிய விபத்தில் உயிரிழந்தவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்ற விழைவை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.**

**இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.”**

- இவ்வாறு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைத் தொடர்ந்து - உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.